## சாதாரண கூட்டம்

2024-ம் ஆண்டு, நவம்பர் மாதம் 26-ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பொருள் எண் .1**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் நவம்பர் 2024 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**தீர்மான எண்.209 நாள்.26.11.2024.**

**பதிவுசெய்யப்பட்டது**

**பொருள் எண். 2**

பள்ளிபாளையம் நகராட்சியில் நவம்பர் மாதம் **22.11.2024–**ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

**(ரூ. லட்சத்தில்)**

| வ. எண். | வரியின விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 2.94 | 239.63 | 0.00 | 110.41 | 2.94 | 129.22 |
| 2. | காலியிட வரி | 2.11 | 4.23 | 1.80 | 1.70 | 0.31 | 2.53 |
| 3. | தொழில்வரி | 0.88 | 18.30 | 0.88 | 7.98 | 0.00 | 10.32 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 0.00 | 71.80 | 0.00 | 32.35 | 0.00 | 39.45 |
| 5 | வரியில்லா இனம் | 0.00 | 18.29 | 0.00 | 9.72 | 0.00 | 8.57 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0.00 | 49.88 | 0.00 | 22.99 | 0.00 | 26.88 |
| | மொத்தம் | 5.93 | 402.14 | 2.69 | 185.16 | 3.25 | 216.98 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1523/2013/அ1

**தீர்மான எண்.210 நாள்.26.11.2024.**

**பதிவுசெய்யப்பட்டது**

**<u>பொருள் எண்.3</u>**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்திற்கு தினந்தோறும் நாளிதழ்கள் காலைகதிர், தினமலர், தினகரன் மற்றும் தினதந்தி ஆகிய நாளிதழ்கள் அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் மூலம் வழங்கங்கப்பட்டு வருகிறது. எனவே அதற்கு தோராயணமாக ஆகும் செலவு ரூ.30000/-(முப்பதாயிரம் மட்டும்) எனவே மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1334/2024/அ1

**தீர்மான எண்.211 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**<u>பொருள் எண்.4</u>**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்திற்கு தினந்தோறும் போடப்படும் நாளிதழ்கள் காலைகதிர், தினமலர், தினகரன் மற்றும் தினதந்தி ஆகிய நாளிதழ்கள் 01.07.2023 முதல் 31.09.2024 வரை நகராட்சி அலுவலகத்திற்கு தினந்தோறும் நாளிதழ்கள் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி நாளிதழ்கள் வாங்கியதற்கு வழங்கும் தொகை ரூ.22650/- ஆகும். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம் .

கோப்பு எண்.1333/2024/அ1

**தீர்மான எண்.212 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**<u>பொருள் எண்.5</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.17432/2024/சி2, தேதி.10.08.2024 – ன் படி தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்,கோவை நிறுவனத்தில் ஆணையாளர் (நிலை II) பயிற்சியில் கலந்து கொண்டார். பயிற்சியின் காலம் 27.08.2024 முதல் 21.09.2024 வரை 20 நாட்கள் பயிற்சியில் கலந்து கொண்டதற்கு ரூ.20,000/- ஆணையாளர் அவர்களால் செலுத்தப்பட்டது. அத்தொகையை ஆணையாளர் அவர்களுக்கு பொது நிதியில் இருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

கோப்பு எண்.1473/2024/சி1

**தீர்மான எண்.213 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**<u>பொருள் எண்.6</u>**

துணைப்பணி மேலாளர், அரசு கிளை அச்சகம், சேலம் அவர்களின் கடித ந.க.எண்.ஆ2/5688/2024 நாள்.24.10.2024-படி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 கீழ் பள்ளிபாளையம் நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட, உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II மற்றும் III வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களை நிர்ணயம் செய்து திருத்திய உரிம்மக்கட்டணத்தை மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்ய, கட்டணமாக ரூ.60,000/-ஐ இ-சலான் மூலம் கிழ்கண்ட தலைப்பில்

Department code:03001 Directorade of Starionery and Printing.

"005800 Stationery and Printing 200 other Press,

Receipts - AA cost of Printing work Done forother,

Government Departments : 0058 00 200 AA 23902"

செலுத்திடவும், இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1332/2024/எச்1

**தீர்மான எண்.214 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண். 7**

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நடப்பு 2024-ம் ஆண்டுக்கு ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளும், திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சி மற்றும் குப்பையில்லா நகராட்சி என பிரகடனப்படுத்தும் வகையில் பொதுமக்களுக்கிடையே ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பது குறித்து தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பள்ளிபாளையம் நகராட்சியில் மேற்காணும் பொருள் குறித்து இரண்டு தினசரி நாளிதழ்களான தினகரன் நாளிழில் 29.10.2024 – தேதியும், தினமலர் நாளிதழில் 29.10.2024 –ம் தேதியும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு, இரு நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் வரப்பெற்ற பட்டியல் தொகையான தினகரன் நாளிதழுக்கு KAL PUBLICATION PVT LTD ரூ.5040/- க்கும், தினமலர் நாளிதழ்க்கு ரூ.4536/- ம் ஆக மொத்தம் ரூ.9576/-ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்.1332/2024/எச்1

**தீர்மான எண்.215 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது.**

**பொருள் எண். 8**

பள்ளிபாளையம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனமான TN 34 AY 8480 ல் உள்ள பேட்டரி பழுதாகி தினசரி ரீசார்ஜ் செய்து இயக்கப்பட்டு வருகின்றது ,இருப்பினும் அவ்வப்பொழுது ரீசார்ஜ் செய்தாலும் பழுதுகள் ஏற்பட்டு வருகின்றது. எனவே புதியதாக பேட்டரி 1 எண்ணம் ரூ.12000/க்குள் கொள்முதல் செய்யவும் இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார வாகனம் எண் TN34 Ay 8480 க்கு புதிய பேட்டரி 1எண்ணம் ரூ.12000/க்கு கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், இப்பணிக்கு விலைப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்.216 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண். 9**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு 15மத்திய நிதிக்குழு மத்திய நிதிக்குழு மானியம் Tied மற்றும் Untied Grant **2023–24** ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 16492 /2023/ EA2 நாள் 19.10.2024 அனுமதி வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | நிர்வாக அனுமதி எண். |
|---|---|---|---|
| | **Tied Grant** | | |
| 1. | பள்ளிபாளையம் நகராட்சியின் அக்ரஹாரம் தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக Pre-Chlorination Plant அமைக்கும் பணி | 7.14 | ஆணையாளர் 1/2024–25 |
| | **Untied Grant** | | |
| 2 | வார்டு எண்.15 பழைய போலீஸ் ஸ்டேசன் வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல். | 4.70 | ஆணையாளர் 2/2024–25 |
| 3 | வார்டு எண்.18 மீனவர் தெரு பகுதியில் அமைந்துள்ள மயானத்திற்கு சுற்றுசுவர் அமைக்கும் பணி | 5.07 | ஆணையாளர் 3/2024–25 |

மேற்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கும், ஒப்பந்தப்புள்ளி நாள்.27.11.2024 அன்று கோரியதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.647/2024/இ1

**தீர்மான எண்.217 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண்.10**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட ஆவாரங்காடு கிருஷ்ணவேணி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரில் அமைந்துள்ள அடர்ந்த மரங்கள் வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்திற்கு அருகில் பொதுமக்கள் சுகாதாரமற்ற முறையில் குப்பைகள் கொட்டி வருவதால் சுகாதார சீர்கேடு விளைவிக்கும் நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட இடத்திற்கு கம்பி வேலி மற்றும் கேட் அமைத்து பாதுகாப்பு முறையில் வைக்கப்படுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியினை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1395/2024/இ1

**தீர்மான எண்.218 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண்.11**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள 32 கழிப்பிடங்கள் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழிப்பது ( Open Defecation ) குறித்து ஆய்வு செய்வதற்கு வருடா வருடம் ஆய்வுக் குழு வருகை புரிந்து கழிப்பிடங்களை ஆய்வு செய்து மத்திய அரசுக்கு அறிக்கை சமர்பிக்கப்பட்டு வருகிறது. எனவே நகராட்சிக்கு சொந்தமான 32 கழிப்பிடங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1435/2024/இ1

**தீர்மான எண்.219 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண்.12**

பள்ளிபாளையம் நகராட்சி குடிநீர் நிதி திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 21.11.2024ம் தேதி வியாழக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் நீதி திட்டம் 2024-25<br>பள்ளிபாளையம் நகராட்சி சமயசங்கிலி தலைமை நீரேற்று நிலையத்தில் 60H.P. டர்பைன் மோட்டார் எண் 1 ஐ பழுது சரி செய்யும் பணி | 1,98,000/- | K. தனபாலன்,<br>208, கச்சேரி வீதி,<br>ஈரோடு. | 0.36%<br>குறைவு |
| | | | கே.எஸ.மாரியப்பன்,<br>716பி,குதிரைகலமேடு,<br>காடப்பநல்லூர் (P.O), பவானி | 0.98%<br>கூடுதல் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.36% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், K.தனபாலன், ஈரோடு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.160/2024/இ1

**தீர்மான எண்.220 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண்.13**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான எலந்தக்குட்டை கிராமத்தில் 20.36 ஏக்கர் நிலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக 15 வருடங்களுக்கு முன்னர் வாங்கப்பட்டது. மேற்கண்ட நகராட்சிக்கு சொந்தமான இடத்தை தனிநபர் எவரும் ஆக்கிரமிப்பு செய்யாத வண்ணம் பாதுகாப்பு செய்திட தனியார் நில அளவையரை கொண்டு நில அளவீடு செய்து, நகராட்சிக்குரிய நிலத்தின் எல்லைகள் அறிந்து கொள்ளும் வகையில் அத்துகல் நடுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,80,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2).மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.221 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண்.14**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு 15மத்திய நிதிக்குழு மத்திய நிதிக்குழு மானியம் Tied மற்றும் Untied Grant **2023–24** ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 16492 /2023/ EA2 நாள் 19.10.2024 அனுமதி வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **Tied Grant** | |
| 1. | திடக்கழிவு மேலாண்மை வெளிக்கொணர்வு முகமை பணிக்கு தொகை வழங்குதல் | 7.14 |

மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.647/2024/இ1

**தீர்மான எண்.222 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண்.15**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு பொறியியல் பிரிவில் குடிநீர் சம்மந்தப்பட்ட கோப்புகள் மற்றும் அளவீட்டு புத்தகங்கள் முறையாக அடிக்கி வைக்க அலமாரி ஏதுவும் இல்லாததால் புதியதாக ஒரு அலமாரி மற்றும் இருக்கை எழுத்தருக்கு மேஜை வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.25,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2).மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.223 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண்.16**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான புதன் சந்தை இறக்கம் மயானம் காவிரி ஆற்றங்கரை ஒட்டி அமைந்துள்ளது. இம்மயானத்தில் பள்ளிபாளையம் நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள பொதுமக்கள் இம்மயானத்தினை பயன்படுத்தி வருகின்றனர். மேற்கண்ட இடத்தில் சுற்றுச்சுவர், காவலர் அறை, எரியூட்டும் மேடை, சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் மயான வளாகத்தினை சுற்றி மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளவும், தயாரிக்கப்பட்டுள்ள திட்ட அறிக்கை நமக்கு நாமே திட்டத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.224 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண்.17**

பள்ளிபாளையம் நகராட்சியில் வார்டு எண்.10 நேரு நகர், வி.ஐ.பி நகர் மற்றும் வார்டு எண்.11 முத்துமாரியம்மன் கோவில் ஆகிய பகுதிகளில் புதிதாக தெரு விளக்குகள் அமைக்க ரூ.52,660/-ஐ தமிழ்நாடு மின்வாரியத்திற்க்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட தொகை பொது நிதியில் இருந்து செலவிடவும் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1076/2024/இ1

**தீர்மான எண்.225 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண்.18**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 ஜீவாசெட் டேங்க் அருகில் 15வது நிதிக்குழு(சுகாதாரமான்யம்) 2023-24ன் கீழ் புதியதாக கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் முன்நுழைவுவாயில் அருகில் உள்ள மின்மாற்றியினை இடமாற்றம் செய்ய தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து மதிப்பீட்டுத் தொகை ரூ.3,09,770/- செலுத்தும்படி கேட்புத் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று தொகை பொதுநிதியில் செலுத்தியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1284/2024/இ1

**தீர்மான எண்.226 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**<u>பொருள் எண்.19</u>**

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான சொர்க்க பூமி மயானம் காவிரி ஆற்றங்கரை ஒட்டி அமைந்துள்ளது. இம்மயானத்தில் பள்ளிபாளையம் நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள பொதுமக்கள் இம்மயானத்தினை பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் இம்மயானத்தில் எரியூட்டும் கொட்டகை இரண்டு போடப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்த நிலையில், இயற்கை சீற்றத்தின் காரணமாக மேற்கூரை சேதமடைந்து காணப்படுகிறது. மேலும், எரியூட்டும் மேடை, சாலை வசதி மற்றும் மயான வளாகத்தினை சுற்றி மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளவும், தயாரிக்கப்பட்டுள்ள திட்ட அறிக்கை நமக்கு நாமே திட்டத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1282/2024/இ1

**தீர்மான எண்.227 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**<u>பொருள் எண்.20</u>**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் உள்ள 60 எண்ணிக்கைகள் HDPE சின்டெக்ஸ் தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்தொட்டிகளுக்கு ஆழ்துளைக் கிணற்றில் இருந்து ஏற்றப்படுவதால் அதிக அளவில் மண் துகள்கள் தேங்கி விடுகிறது. இதனை மூன்று மாதம் ஒருமுறை (இருமுறை) சுத்தம் செய்தால் மட்டுமே பொதுமக்கள் குடிநீர் அல்லாத தண்ணீரை பயன்படுத்த இயலும். எனவே இத்தொட்டிகளை சுத்தம் செய்ய ஆகும் செலவினம் ரூ. 85,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.228 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**<u>பொருள் எண்.21</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பொது நிதி திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 21.11.2024ம் தேதி வியாழக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **பொது நிதி 2024–25**<br>ஆவாரங்காடு பகுதியில் அமைந்துள்ள நகராட்சி சமுதாயக் கூடத்தில் மண்டபத்தில் சமையல் செய்வதற்கு தேவையான பாத்திரங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் மேம்பாட்டு பணிகள் செய்தல் | 5,00,000/- | ஜெய்ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்ஷன் புரமோட்டார்ஸ் அன் ரியல் எஸ்டேட்,<br>105, திருச்செங்கோடு ரோடு மேற்கு, பள்ளிபாளையம். | 0.52% குறைவு |
| | | | M/s. எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5-6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.89% கூடுதல் |

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.89% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் ஜெய்ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்ஷன் புரமோட்டார்ஸ், பள்ளிபாளையம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1365/2024/இ1

**தீர்மான எண்.229 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண். 22**

பள்ளிபாளையம் நகராட்சி குடிநீர் நிதி திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 21.11.2024ம் தேதி வியாழக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **குடிநீர் நீதி திட்டம் 2024-25**<br>பள்ளிபாளையம் நகராட்சிக்கு 2 எண்ணிக்கை 7.50 H.P மற்றும் 4 எண்ணிக்கை 5 H.P திறன் கொண்ட ஆழ்துளை நீர்மூழ்கி மின்மோட்டார் கொள்முதல் செய்யும் பணி | 9,00,000/- | M/s.VNP வைண்டிங் அன் டிரன்ஸ், , காந்திபுரம் முதல் தெரு,பள்ளிபாளையம் | 0.66% குறைவு |
| | | | கே.எஸ¦மாரியப்பன், 716பி,குதிரைல்¦மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 1.00% கூடுதல் |

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 066% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s. VNP வைண்டிங் அன் டிரன்ஸ், பள்ளிபாளையம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1282/2024/இ1

**தீர்மான எண்.230 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண். 23**

பள்ளிபாளையம் நகராட்சி குடிநீர் நிதி திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 21.11.2024ம் தேதி வியாழக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>குடிநீர் நீதி திட்டம் 2024-25</u> நகராட்சி பகுதியில் பழுதடைந்துள்ள போர்வெல் தண்ணீர் இரும்பு குழாய்களை அகற்றிவிட்டு அதற்கு மாற்றாக HDPE குழாய்களை பதிப்பதற்கு HDPE குழாய்கள் கொள்முதல் செய்யும் பணி | 8,00,000/- | M/s.VNP வைண்டிங் அன் டிரன்ஸ், காந்திபுரம் முதல் தெரு, பள்ளிபாளையம் | 0.44% குறைவு |
| | | | கே.எஸ¦மாரியப்பன், 716பி,குதிரைகல¦மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 1.10% கூடுதல் |

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.44% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s. VNP வைண்டிங் அன் டிரன்ஸ், பள்ளிபாளையம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.284/2024/இ1

**தீர்மான எண்.231 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது.**

**பொருள் எண். 24**

பள்ளிபாளையம் நகராட்சி குடிநீர் நிதி திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 21.11.2024ம் தேதி வியாழக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>குடிநீர் நீதி திட்டம் 2024-25</u> குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு தேவையான பைப் மற்றும் பைப் உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | 10,00,000/- | தமிழ்நாடு எண்டர்பிரைசஸ், 9எ2, பள்ளிபாளையம் மெயின் ரோடு, குமாரபாளையம். | 0.64% குறைவு |
| | | | S. யுவராஜ், 66E3H, பள்ளிபாளையம் ரோடு, குமாரபாளையம். | 1.56% கூடுதல் |

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.64% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், தமிழ்நாடு எண்டர்பிரைசஸ், குமாரபாளையம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.232 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**<u>பொருள் எண். 25</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஜே.சி.பி. வாகனம் எண் TN34 R0381 கடந்த 2013 ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு பொதுசுகாதாரம் மற்றும் குடிநீர் பிரிவு பணிகளுக்கு என பயன்படுத்தப்பட்டு வந்தது. இவ்வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு சுமார் 11 ஆண்டுகளுக்கு மேல் ஆன காரணத்தினால் அடிக்கடி வாகனத்தில் ஏற்பட்டு வரும் பழுதுகளை சரிசெய்வதற்கான செலவினம் அதிக அளவில் ஏற்பட்டது. இதன் காரணமாக 15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் புதிய ஜே.சி.பி.வாகனம் ஒன்று 26.07.2024 தேதி கொள்முதல் செய்யப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. புதிய ஜே.சி.பி.வாகனம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதால் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வந்த TN34 R0381 ஜே.சி.பி வாகனத்தினை இயக்கப்படாமல் இருக்கும் பட்சத்தில் வாகனம் முற்றிலுமாக இயக்க இயலாத நிலை ஏற்பட்டுவிடும். எனவே TN34 R0381 ஜே.சி.பி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் பணிமனையில் விலைப்புள்ளிகளை பெற்று பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1308/2024/இ1

**தீர்மான எண்.233 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**<u>பொருள் எண். 26</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 பெரும்பாறைக்காடு பகுதியில் நகர்மன்ற உறுப்பினர் புதிய அங்கன்வாடி மையம் அமைத்து தரக்கோரியதற்கிணங்க, மேற்படி பகுதியில் புதியதாக ஒரு அங்கன்வாடி மையம் கட்டிடம் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.15,00,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணியினை கல்வி நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.234 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**<u>பொருள் எண். 27</u>**

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள 33 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகிறது. இம்மையங்களில் டைல்ஸ் பதிக்கும் பணி, கதவு ஜன்னல் பழுது, வர்ணம் பூசுதல், குடிநீர் வசதி செய்தல் இதர பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.10,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணியினை கல்வி நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1335/2024/இ1

**தீர்மான எண்.235 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

பொருள் எண். 28

பள்ளிபாளையம் நகராட்சியில் உள்ள 21 வார்டு பகுதிகளிலும் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்வதற்காக 93 விசைபம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த விசைபம்புகளில் பழுது ஏற்பட்டால் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீரல்லாத தண்ணீர் தேவை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும், கோடைகாலத்தினை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு தடையின்றி தண்ணீர் விநியோகம் செய்ய உடனுக்குடன் பழுதுகளை சரிசெய்ய ஆறு மாதத்திற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/-ஐ மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.236 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

பொருள் எண். 29

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகள் மூன்றாண்டு சாதனைகளை கீழ்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்கண்ட விபரப்படி விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழில்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | விளம்பரம் செய்யப்பட்ட நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | காலைக்கதிர் (மகாலட்சுமி மீடியா பிரைவேட் லிமிடேட்) | 11.10.2024 | 10206.00 |
| 2 | கால் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் (தினகரன்) | 11.10.2024 | 9639.00 |
| 3 | தீக்கதிர் | 17.10.2024 | 9990.00 |
| 4 | தினமலர் | 02.07.2024 | 9702.00 |
| 5 | மாலைமலர் (மலர் பப்ளிகேஷன்ஸ் லிமிடேட்) | 26.10.2024 | 9900.00 |
| | | மொத்தம் | **49437.00** |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்டவாறு நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு பொதுநிதியில் இருந்து தொகை வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.961/2024/இ1

**தீர்மான எண்.237 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

பொருள் எண். 30

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட சனிசந்தை வளாகத்தில், சமுதாயக் கூடத்தினை சுற்றியுள்ள வளாகப் பகுதிக்கு கலைஞர் திடல் எனப் பெயர் சூட்டவும், இருபுறமும் உள்ள நுழைவு வாயில்களில் கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவுகளை நகராட்சி சார்பாக அமைத்திட அனுமதிக்கு அரசாணை (அரசாணை (நிலை) எண்.168 நாள்.09.11.2024) வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வளாகத்திற்கு கலைஞர் திடல் என பெயர் சூட்டவும், இருபுறமும் உள்ள நுழைவு வாயில்களில் கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவு அமைத்திட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதையடுத்து அப்பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்காணும் பணிக்கான தொகையினை பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1410/2024/இ1

**தீர்மான எண்.238 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

<u>பொருள் எண். 31</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் சென்னை கன்னியாகுமரி உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி மற்றும் அம்ரூத் 2.0 குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்டப்பணி மேற்கொள்ளும் சமயத்தில் ஏற்கனவே உள்ள குடிநீர் வினியோகம் செய்யப்படும் பகிர்மானக்குழாய் மற்றும் போர்வெல் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு சாலைகளில் தண்ணீர் அதிகளவில் வெளியேறுகிறது. இதன் காரணமாக நெடுஞ்சாலைத்துறை மற்றும் நகராட்சியால் மேற்கொள்ளப்படவேண்டிய சாலைப்பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. எனவே, குடிநீர் வினியோகம் சீரான முறையில் பொதுமக்களுக்கு தடையின்றி வழங்குவதற்க்கு 6 மாத காலத்திற்க்கு ஒப்பந்த அடிப்படையில் 6 பணியாளர்களை பணியமர்த்தி உடனுக்குடன் பழுதுகளை சரிசெய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.8,80,000/-ஐ மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட தொகை குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்வதற்க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1417/2024/இ1

**தீர்மான எண்.239 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

<u>பொருள் எண். 32</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து செல்லும் குழாய் பராமரிப்பு பணி, குடிநீர் பகிர்மானக் குழாய் பழுது பராமரிப்பு பணி, கழிப்பிடங்களில் உள்ள குழாய் பராமரிப்பு பணி போன்ற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் இல்லாத நிலையில், தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்சொன்ன பணிகளை மேற்கொள்வது அவசியமாகும். எனவே, ஆழ்துளைக் கிணறு மூலமாக தண்ணீர் விநியோகம் செய்ய பயன்படும் குழாய் பராமரிப்பு, கழிப்பிடக் குழாய், பகிர்மானக் குழாய் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த முறையில் 12 பணியாளர்களை கொண்டு பணிமேற்கொள்வதற்கு நகர்மன்ற அனுமதி பெற்று திருவாளர்கள்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.34638/2022/EA2-SWM-8 நாள்.10.01.2023ல் அனுமதி வரப்பெற்றுள்ளது. எனவே, பொது சுகாதாரப் பிரிவிற்கு வரப்பெற்றது போல் குடிநீர் பிரிவிற்கு என்று உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அனுமதி கிடைக்கப்பெறும் வரை 3 மாதங்களுக்கு (ஜனவரி 2025 முதல் மார்ச் 2025 வரை) ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ், கொமாரபாளையம் அளித்துள்ள அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.6,80,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்காணும் பணிக்கான தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2157/2024/இ1

**தீர்மான எண்.240 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**<u>பொருள் எண். 33</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் 7 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் ஒரே ஒரு குடிநீர் திறப்பாளர் பணியிடம் மட்டுமே உள்ள நிலையில், 7 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகம் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்க ஒப்பந்த முறையில் 4 பணியாளர்களை நியமித்து பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கும் பணிக்கு நகர்மன்ற அனுமதி பெற்று திருவாளர்கள்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.**34638/2022**/EA2-SWM-8 நாள்.10.01.2023ல் அனுமதி வரப்பெற்றுள்ளது. எனவே, பொது சுகாதாரப் பிரிவிற்கு வரப்பெற்றது போல் குடிநீர் பிரிவிற்கு என்று உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அனுமதி கிடைக்கப்பெறும் வரை அல்லது 3 மாதங்களுக்கு (ஜனவரி 2025 முதல் மார்ச் 2025 வரை) ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ், கொமாரபாளையம் அளித்துள்ள அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.3,00,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் பணிக்கான தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1978/2024/இ1

**தீர்மான எண்.241 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**<u>பொருள் எண். 34</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளிலும் உள்ள மொத்தம் 1393 தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் நிரந்தர மின்பணியாளர் ஒருவர் மட்டுமே பணியாற்றி வருவதால், அனைத்து தெருவிளக்குகளையும் பராமரிக்க இயலாமல் பணியில் தொய்வு ஏற்படுகிறது. எனவே தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஒப்பந்த முறையில் 3 மின் பணியாளர்களை நியமிக்கவும், நகராட்சிக்கு சொந்தமான மினி எர்த் மூவர் ( JCB) வாகனத்தினை இயக்க 1 ஓட்டுநரை ஒப்பந்த அடிப்படையில் 3 மாத காலத்திற்கு (மொத்தம் 4 பணியாளர்கள்) பணிகள் செய்வதற்கு நகர்மன்ற அனுமதி பெற்று திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.**34638/2022**/EA2-SWM-8 நாள்.10.01.2023ல் அனுமதி வரப்பெற்றுள்ளது. எனவே, பொது சுகாதாரப் பிரிவிற்கு வரப்பெற்றது போல் குடிநீர் பிரிவிற்கு என்று உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அனுமதி கிடைக்கப்பெறும் வரை 3 மாதங்களுக்கு (ஜனவரி 2025 முதல் மார்ச் 2025 வரை) ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் அளித்துள்ள அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.3,70,000/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் பணிக்கான தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2149/2024/இ1

**தீர்மான எண்.242 நாள்.26.11..2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண். 35**

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளுக்கு புதிய மற்றும் பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 4 மின் மோட்டார்கள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 4 மின்மோட்டார்களை பயன்படுத்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மோட்டார்கள் அனைத்தும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் 1 மின்பணியாளர் கொண்டு தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் தலைமை நீரேற்று நிலைய மின்மோட்டார்களை இயக்கி பராமரிக்க கடினமானதாக உள்ளது. மேலும் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கவும், மின்மோட்டார்களை இயக்கி பராமரிக்க தேவையான மின்பணியாளர்கள் 7 பேரை ஒப்பந்த முறையில் நியமித்திடவும், நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு வளாகத்தில் உள்ள பயோ கேஸ் பிளாண்டினை பராமரிக்க ஒப்பந்த முறையில் 4 பணியாளர்கள், பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் ஏற்படும் அடைப்புகளை உடனுக்குடன் அகற்றுவதற்கு 2 பணியாளர்கள் நியமிக்கவும் (மொத்தம் 13பணியாளர்கள்) நகர்மன்ற அனுமதி பெற்று திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.34638/2022/EA2-SWM-8 நாள்.10.01.2023ல் அனுமதி வரப்பெற்றுள்ளது. எனவே, பொது சுகாதாரப் பிரிவிற்கு வரப்பெற்றது போல் குடிநீர் பிரிவிற்கு என்று உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அனுமதி கிடைக்கப்பெறும் வரை அல்லது 3 மாதங்களுக்கு (ஜனவரி 2025 முதல் மார்ச் 2025 வரை) ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் அளித்துள்ள அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.8,60,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் பணிக்கான தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2153/2024/இ1

**தீர்மான எண்.243 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

**பொருள் எண். 36**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான புதன் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் பயன்பாட்டிற்கென இரண்டு எண்ணிக்கையிலான கிரைண்டர்கள் உள்ளது. இந்த இரண்டு கிரைண்டர்களிம் உள்ள மிஷின் பேரிங், ப்ரேம்செட், ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகள் சரிசெய்ய 12.11.2024ம் தேதி செவ்வாய் கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சிவசக்தி கிச்சன் எகியுப்மென்ட்ஸ்<br>பவானி மெயின் ரோடு, சுண்ணாம்பு ஓடை நிறுத்தம் ஈரோடு. | ரூ. **18654.00** |
| 2 | கே.எஸ்.மாரியப்பன்,<br>716பி,குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | ரூ. **18750.00** |
| 3 | M/s.எஸ்.ஏ.சக்கரபாணி அன் சன்,<br>611, மேட்டூர் மெயின் ரோடு, பவானி. | ரூ. **18800.00** |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 - ல் கண்ட ஸ்ரீ சிவசக்தி கிச்சன் எகியுப்மென்ட்ஸ் ஈரோடு என்பவரது விலைப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஸ்ரீ சிவசக்தி கிச்சன் எகியுப்மென்ட்ஸ் ஈரோடு என்பவருக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண்.1414/2024/இ1

**தீர்மான எண்.244 நாள்.26.11.2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண். 37**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான புதன் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் பயன்பாட்டிற்கென இரண்டு எண்ணிக்கையிலான கிரைண்டர்கள் உள்ளது. இந்த இரண்டு கிரைண்டர்களிம் உள்ள மிஷின் பேரிங், ப்ரேம்செட், ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகள் சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/- மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்காணும் பணிக்கான தொகையினை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.245 நாள்.26.11.2024.**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண். 38**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் 01.10.2024 அன்று நடைபெற்ற காணொலிக் காட்சி ஆய்வுக்கூட்ட அறிவுரைகளில், பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் செலுத்த வேண்டிய 2024-2025 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் அரையாண்டிற்கான சொத்துவரியை வருகிற 31.10.2024 ம் தேதிக்குள் செலுத்துபவர்களுக்கு 5 சதவீதி ஊக்கத் தொகை வழங்குவதை பொதுமக்களும் அறிந்து கொள்ளும் வகையில் பிளக்ஸ் பேனர் 8' x 8' ன் மூலம் 4 எண்ணிக்கையில் வைப்பதற்கு 29.10.2024தேதி செவ்வாய்கிழமை மாலை 3.30 மணிக்கு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s.SJ டிஜிட்டல் பிளக்ஸ் பிரிண்டிங்<br>58/1, ஸ்ரீகுரு டவர்ஸ்,<br>சங்ககிரி மெயின் ரோடு,<br>பள்ளிபாளையம். . | 10,300/– |
| 2 | M/s.S.A. சக்ரபாணி அன் சன்<br>611, மேட்டூர் ரோடு,<br>பவானி. | 10,750 /– |
| 3 | கே.எஸ்¦மாரியப்பன்,<br>716பி,குதிரைகல்¦மேடு, காடப்பநல்லூர் (P.O),<br>பவானி | 10,575/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 - ல் கண்ட விலைப்புள்ளியானது குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1238/2024/அ1

**தீர்மான எண்.246 நாள்.26.11.2024.**

**அனுமதிக்கப்பபட்டது**

(ஒம்) மோ.செல்வராஜ்,
தலைவர்,
பள்ளிபாளையம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

/உண்மை நகல்/

ஆணையாளர்
பள்ளிபாளையம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.